27-02-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 18.01.1990

சுயம் மற்றும் சேவையில் தீவிர வேகத்தில் பரிவர்த்தனை

செய்வதற்கான ஆழமான இரகசியம்

இன்று அனைத்து குழந்தைகளுடைய அன்பான தாய், தந்தை தன்னுடைய அன்பான குழந்தை களின் அன்பான உள்ளத்தின் சப்தம் மற்றும் அன்பின் விலைமதிப்பற்ற முத்துக்களால் ஆன மாலைகளைப் பார்த்து பார்த்து குழந்தைகளுக்கு அன்பிற்கான ரிட்டர்னாக (பதிலாக) சதா சமீப மானவர் ஆகுக, சம்மான சக்திசாலி ஆகுக, சதா சம்பன்னமான திருப்தியானவர் ஆகுக என்ற விசேஷமான வரதானங்களை கொடுத்துக் கொண்டு இருக் கின்றார்கள். அனைவருடைய உள்ளத்தின் அன்பானது, உங்களுடைய உள்ளத்தில் எண்ணம் எழுந்ததுமே பாப்தாதாவிடம் மிகவும் தீவிர வேகத்தில் வந்தடைந்துவிடுகிறது. நாலாபுறங்களினுடைய உள்நாட்டு, வெளிநாட்டு குழந்தைகள் இன்று அன்புக் கடலில் லவ்லீன் ஆகி இருக்கின்றார்கள். பாப்தாதா, அதிலும் விசேஷமாக பிரம்மா தாய், குழந்தைகள் அன்பில் லவ்லீன் ஆகி இருப்பதைப் பார்த்து தானும் குழந்தைகளினுடைய அன்பில், சிநேகத்தில் மூழ்கி இருக்கின்றார். பிரம்மா தாய்க்கு குழந்தைகள் மீது விசேஷமான அன்பு இருந்தது மற்றும் இப்பொழுதும் இருக்கிறது என்பதை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். பாலனை கொடுக்கக் கூடிய தாய்க்கு தானாகவே விசேஷமான அன்பு இருக்கத் தான் செய்கிறது. இன்று பிரம்மா தாய், குழந்தைகளுடைய மனதில், புத்தியில், உள்ளத்தில், கண்களில், தாய் தந்தையைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை ஒவ்வொரு குழந்தையிடமும் பார்த்து, மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார். அனைத்துக் குழந்தை களும் ஒரே பலம், ஒரே நம்பிக்கை மூலம் முன்னேறிக் கொண்டே இருக்கின்றார்கள். ஒருவேளை, எங்கேயாவது நின்று விட்டாலும் கூட தாய் தந்தையினுடைய அன்புக் கரம் மீண்டும் சக்திசாலி ஆக்கி முன்னேற்றிவிடுகிறது.

இன்று தாய் தந்தை குழந்தைகளுடைய சிரேஷ்டமான பாக்கியத்தின் பாடலை பாடிக் கொண்டு இருந்தார்கள். ஏனென்றால், இன்றைய தினம் விசேஷமாக சூரியன் சந்திரனுடைய முதுகெலும்பாகி, நட்சத்திரங்களை விஷ்வத்தின் ஆகாயத்தில் பிரத்யட்சம் செய்த தினம் ஆகும். எவ்வாறு யக்ஞத் தினுடைய ஸ்தாபனையின் ஆரம்பத்தில் பிரம்மா பாபா குழந்தைகளுக்கு முன் தன்னுடைய அனைத்தையும் சமர்ப்பணம் செய்தார் அதாவது வில் செய்தார். இன்றைய தினம் பிரம்மா பாபா குழந்தைகளுக்கு சர்வ சக்திகளை வில் (சமர்ப்பணம்) செய்தார் அதாவது வில்பவர் (மனோ சக்தி) கொடுத்தார். இன்றைய தினம் கண்கள் மூலம் மற்றும் சங்கல்பத்தின் மூலம் தந்தை குழந்தை களுக்கு விசேஷமாக மகன் தந்தையை வெளிப்படுத்துகின்றார் என்ற விசேஷமான பரிசு கொடுத்தார். இன்றைய தினம் தந்தை, பிரத்யட்சமாக சாகார ரூபத்தில் செய்விப்பவர் என்ற நடிப்பை நடிப்பதற்கான பிரத்யட்ச ரூபத்தைக் காண்பித்தார். பிரம்மா பாபாவும் இன்றைய தினம் பிரத்யட்ச ரூபத்தில் செய்விக்கக்கூடிய தந்தையின் துணைவன் ஆனார், செய்பவர்களாக குழந்தை

களை நிமித்தம் ஆக்கினார் மற்றும் செய்விப்பவர்களாக தாய் தந்தை இணைந்தார்கள். இன்றைய தினம் பிரம்மா பாபா தன்னுடைய சேவையின் முறை மற்றும் நிலையை மாற்றிக் கொண்டார். இன்றைய தினம் விசேஷமாக பிரம்மா பாபா தேகத் திலிருந்து சூட்சும ஃபரிஷ்தா சொரூபத்தை தாரணை செய்து உயர்ந்த வதனம், சூட்சும வதன நிவாசி ஆனார், எதற்காக? குழந்தைகளை தீவிர வேகத்தில் உயர்த்துவதற்காக, குழந்தைகளை ஃபரிஷ்தா ரூபத்தில் பறக்க வைப்பதற்காக. இந்தளவு சிரேஷ்டமான மகத்துவம் வாய்ந்த தினம் இன்றைய தினம். சினேகத்திற்கான தினம் மட்டுமல்ல, ஆனால், விஷ்வத்தின் ஆத்மாக்களுடைய, பிராமண ஆத்மாக்களுடைய மற்றும் சேவையினுடைய நிலையின் மாற்றம் என்பது நாடகத்தில் பதிவாகி இருந்தது, அதை குழந்தைகளும் பார்த்துக் கொண்டு இருக் கின்றீர்கள். விஷ்வத்தின் ஆத்மாக்களுக்காக புத்திவானுக்கெல்லாம் புத்திவான் ஆனார். புத்தியினுடைய பரிவர்த் தனை (மாற்றம்) ஏற்பட்டது, தொடர்பில் வந்து சகயோகி ஆனார்கள். பிராமண ஆத்மாக்களில், சிரேஷ்ட எண்ணத்தின் மூலம் தீவிர வேகத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. சேவையில் சன் úஷேôஸ் ஃபாதர் என்ற பரிசின் மூலம் வர்க்க சேவையின் (விங்ஸ் சேவை) ஆரம்பம் செய்யப்பட்டது. இந்தப் பரிசு (கிஃப்ட்) சேவையின் லிஃப்ட் ஆகிவிட்டது. எனில் மாற்றம் ஏற்பட்டுள்ளது அல்லவா. போகப்போக சேவையில் இன்னும் பல மாற்றங்களைப் பார்ப்பீர்கள்.

இப்பொழுது வரை பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் தங்களுடைய உடல், மனதினுடைய உழைப் பினால் நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றீர்கள், மேடையை தயார் செய்கின்றீர்கள், அழைப்பிதழ் அச்சடிக்கின்றீர்கள், வி.ஐ.பி யாரையாவது அழைக்கின்றீர்கள், ரேடியோ, டி.வி. நிலையங்களில் பணி புரிபவர்களை சகயோகி ஆக்குகின்றீர்கள், பணத்தை செலவிடுகின்றீர்கள். ஆனால், போகப் போக நீங்கள் சுயம் வி.ஐ.பி ஆகிவிடுவீர்கள். உங்களை விட பெரியவர்களாக யாரும் தெரிய மாட்டார்கள். தயாராக இருக்கும் மேடையில் பிறர் உங்களுக்கு அழைப்பு கொடுப்பார்கள். தானே முன் வந்து தங்களுடைய உடல், மனம், பணத்தை சேவைக்காகக் கொடுப்பார்கள். உங்களிடம் வேண்டுவார்கள். நீங்கள் உழைக்கமாட்டீர்கள், நீங்கள் எங்களிடம் வாருங்கள் என்று அவர்கள் வேண்டுவார்கள், அப்பொழுதே பிரத்யட்சத்தின் குரல் உரக்க ஒலிக்கும் மற்றும் அனைவருடைய கவனமும் குழந்தைகளாகிய உங்கள் மூலம் தந்தையின் பக்கம் செல்லும். இது அதிக சமயம் நடக்காது. அனைவருடைய பார்வையும் தந்தையின் பக்கம் செல்வது என்றால் பிரத்யட்சம் ஏற்படுவது என்பதாகும் மற்றும் வெற்றி முழக்கம் நாலாபுறங்களிலும் ஒலிக்கும். நாடகத்தில் சூட்சுமமான இந்த இரகசியம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரத்யட்சத்திற்குப் பிறகு அனேக ஆத்மாக் கள் பச்சாதாபப்படுவார்கள். மேலும், குழந்தைகளுடைய பச்சாதாபத்தைப் பார்க்க முடியாது, ஆகையினால், மாற்றம் ஏற்பட்டுவிடும். இப்பொழுது பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய உயர்ந்த நிலையானது சதா காலத்திற்கானதாக உருவாகிக் கொண்டு இருக்கிறது. உங்களுடைய உயர்ந்த ஸ்டேஜ் (நிலை) சேவையின் ஸ்டேஜிற்கான (நிலை, மேடை) அழைப்புகளைக் கொண்டு வரும். மேலும், எல்லையற்ற விஷ்வ மேடையில் வெற்றியின் நடிப்பு நடிப்பீர்கள். கேட்டீர்களா, சேவையின் மாற்றத்தைப் பற்றி?

தந்தை அவ்யக்தமாகுவது என்பது நாடகத்தில் மறைமுகமான இரகசியமாக

பதிவாகி இருந்தது. குறைந்த திலும் குறைந்தது பிரம்மா பாபா விடைபெற்று சென்றிருக்கலாம் என்று சில குழந்தைகள் நினைக்கின்றனர். நீங்கள் விடை கொடுப்பீர்களா என்ன? கொடுக்கமாட்டீர்கள் அல்லவா. எனில், பலவான் யார்? ஒருவேளை, விடைபெறுகின்றார் என்றால் கர்மாதீத் ஆகியிருக்க முடியாது, ஏனெனில், ஆன்மிக சம்பந்தமானது இரத்த சம்பந்தத்தை விட பலகோடி மடங்கு அதிகமானது ஆகும். பிரம்மா கர்மாதீத் ஆகவேண்டி இருந்ததா அல்லது அன்பின் பந்தனத்தில் செல்லவேண்டி இருந்ததா? நாடகம் கர்மாதீத் ஆக்கக்கூடிய பந்தனத்தில் கட்டிப்போட்டு விட்டது என்று பிரம்மா பாபா கூட கூறுகின்றார். மேலும், கட்டிப்போட்டது கூட எவ்வளவு நேரத்தில்! சமயம் இருந்திருந் தால் வேறு நடிப்பு இருந்திருக்கும், ஆகையினால், அது நேரத்திற்கான விளையாட்டு நடந்து விட்டது. குழந்தைகளையும் கூட அறியாதவர்களாக ஆக்கிவிட்டது, தந்தையையும் அறியாத வராக ஆக்கிவிட்டது. இதையே ஆஹா! நாடகம் ஆஹா! என்று சொல்லப்படுகிறது. அப்படித் தானே. எப்பொழுது ஆஹா! நாடகம் ஆஹா! என்பது உள்ளதோ, அப்பொழுது வேறு எந்த எண்ணமும் எழமுடியாது. முற்றுப்புள்ளி இடப்பட்டுவிட்டது அல்லவா. இல்லையென்றால், குறைந்ததிலும் குறைந்தது, என்ன செய்கிறது என்றாவது குழந்தைகள் கேட்டிருக்க முடியும்? ஆனால், தந்தையும் அமைதியாக இருந்தார், குழந்தைகளும் அமைதியாக இருந்தனர். இதையே நாடகத்தின் முற்றுப்புள்ளி என்று சொல்லப்படுகிறது. அந்த நேரத்திலோ முற்றுப்புள்ளி தான் இடப்பட்டது அல்லவா. பின்னர் எத்தனையோ கேள்விகள் எழுந்திருக்கலாம், ஆனால், அந்த விநாடி எழவில்லை. எனவே, ஆஹா! நாடகம் ஆஹா! என்று சொல்லலாம் அல்லவா. பாபா பாபா என்று கூட பின்னர் அழைத்தனர், முதலில் அழைக்கவில்லை. நாடகத்தின் இந்த விசித்திரமான பதிவு நடக்க வேண்டியது இருந்தது மற்றும் நடந்து தான் ஆகவேண்டும். மாறக்கூடிய நாடகம் பாகத்தையும் கூட மாற்றிவிடுகிறது.

பெரும்பான்மையான டீச்சர்கள் அவ்யக்த படைப்புகளே ஆவார்கள். சாகார தந்தையின் பாலனையைப் பெற்ற டீச்சர்கள் மிகவும் குறைவானவர்களே. அதிவிரைவாகப் பிறப்பெடுத் திருக்கின்றீர்கள். ஏனெனில், சங்கல்பத்தின் நிலை அனைத்தையும் விட வேகமானது ஆகும். ஆதிரத்தினங்கள் வாய்வழி வம்சத்தினர் ஆவார்கள் மற்றும் நீங்கள் சங்கல்பத்தினால் உருவான வம்சாவழி ஆவீர்கள். ஆகையினால், பிரம்மாவின் இரட்டை படைப்பு என்ற மகிமை பாடப் பட்டுள்ளது. ஒன்று வாய்வழி வம்சத்தினர், பிறகு, சங்கல்பத்தின் மூலம் சிருஷ்டியைப் படைத்தார். இரண்டு வகையினரும் பிரம்மாவின் படைப்பு தான், ஆகையினாலேயே பி.கே. என்று அழைக்கப் படுகின்றீர்கள். சிவக்குமாரி என்று அழைக்கப்படவில்லை தானே. அனைத்து இரட்டை அயல் நாட்டினரும் கூட சங்கல்பத்தின் படைப்பே ஆவார்கள். அத்தகைய தீவிர வேகத்தில் அனைத்து டீச்சர்களும் முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்களா? நீங்கள் தீவிர வேகத்தின் படைப்பாக இருக்கின்றீர்கள் என்றால் முயற்சியும் கூட தீவிர வேகத்தில் இருக்க வேண்டும். சதா தீவிர முயற்சியாளராக இருக்கின்றேனா அல்லது அவ்வப்பொழுது இருக்கின்றேனா என்று சதா இந்த சோதனை செய்யுங்கள். புரிந்ததா? இப்பொழுது என்ன, ஏன் என்ற பாடலை அழித்துவிடுங்கள். ஆஹா! ஆஹா! என்ற பாடல் பாடுங்கள். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து அன்பு மற்றும் சக்தி நிறைந்த சிரேஷ்ட

ஆத்மாக்களுக்கு, சதா தந்தையுடன் தீவிர வேகத்தில் மாற்றத்திற்குத் துணையாக ஆகியிருக்கும் சமீபமான ஆத்மாக் களுக்கு, சதா தன்னுடைய பறக்கும் கலை மூலம் மற்ற ஆத்மாக்களையும் கூட பறக்க வைக்கக் கூடிய பந்தனமற்ற பறக்கும் பறவையாக இருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா சன் ஷோஸ் ஃபாதர் என்ற பரிசு மூலம் சுயம் மற்றும் சேவையில் தீவிர வேகத்தில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய, அத்தகைய அனைத்து லவ்லீன் குழந்தைகளுக்கு இந்த மகத்துவமான தினத்தின் மகத்துவத்தின் கூடவே தாய், தந்தையினுடைய விசேஷமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் உரித்தாகுக.

ஹூப்ளி மண்டலத்தின் சகோதர, சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

சதா தன்னை ஒவ்வொரு அடியில் (கதம்) பல கோடிகளின் (பதம்) வருமானம் செய்யக்கூடிய பத்மாபதம் பாக்கியவான் எனப் புரிந்துள்ளீர்களா? ஒவ்வொரு அடியில் கோடி. . . என்று மகிமை என்ன உள்ளதோ, இது யாருக்காக பாடப்பட்ட மகிமை? முழு நாளில் எத்தனை கோடியை சேமிக்கின்றீர்கள்? சங்கமயுகம் பெரியதிலும் பெரிய வருமானம் செய்யும் சீசனுக்கான (பருவ காலம்) யுகம் ஆகும். சீசன் காலத்தில் என்ன செய்யப்படுகிறது? அந்தளவு கவனம் வைத்திருக் கின்றீர்களா? இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை என்பது ஒவ்வொரு நேரமும் நினைவிருக்க வேண்டும். எந்த நேரம் கடந்துவிட்டதோ, அது மீண்டும் வராது. ஒரு வினாடி வீணாகக் கடந்துவிட்டது என்றால் எத்தனை அடிகள் வீணாகிவிட்டன? கோடி வீணாகிவிட்டது. ஆகையினால், யார் நேரத்தின் மகத்துவத்தை அறிந்துள்ளார்களோ, அவர்கள் தானாகவே மகான் ஆகின்றார்கள் என்ற இந்த சுலோகன் ஒவ்வொரு நேரமும் நினைவு இருக்க வேண்டும். தன்னையும் அறிந்திருக்க வேண்டும் மற்றும் சமயத்தையும் அறிந்திருக்க வேண்டும். இரண்டுமே விசேஷமானவை. இந்த நினைவு தினத்தில் விசேஷமாக சதா சக்திசாலி ஆவதற்கான சிரேஷ்ட சங்கல்பம் செய்துள்ளீர்களா? வீணான எண்ணம், பேச்சு மற்றும் அனைத்து ரூபத்திலும் வீணானதை முடிவடையச் செய்வதற்கான தினம் ஆகும். வீணானது என்றால் என்ன, சக்திசாலி நிலை என்றால் என்ன என்ற ஞானம் எப்பொழுது கிடைத்துவிட்டதோ, அப்பொழுது ஞானம் நிறைந்த ஆத்மா ஒருபொழுதும் சக்திசாலி நிலையை விட்டுவிட்டு வீணானவற்றின் பக்கம் செல்லமுடியாது. மேலும், எந்தளவு சுயம் சக்திசாலியாக ஆவீர்களோ, அந்தளவு பிறரையும் சக்திசாலியாக ஆக்கமுடியும். 63 ஜென்மங்களாக இழந்துவிட்டீர்கள், மேலும், சக்திசாலி ஆகுவதற்கான ஜென்மம் இது ஒன்றே ஆகும். எனவே, இந்த சமயத்தை வீணாக்கக் கூடாது அல்லவா! அமிர்தவேளையில் இருந்து இரவு வரை தன்னுடைய தினச்சரியத்தை (கால அட்டவணை) சோதனை செய்யுங்கள். இரவு மட்டும் சார்ட்டை சோதிக்க வேண்டும் என்பது கிடையாது, ஆனால், இடை இடையில் சோதனை செய்யுங்கள், அடிக்கடி சோதனை செய்வதனாலேயே மாற்றம் கொண்டு வரமுடியும். ஒருவேளை, இரவில் சோதனை செய்தீர்கள் என்றால் எது வீணாகிவிட்டதோ, அது வீணானதின் கணக்கில் சென்றுவிடும், ஆகையினால், பாப்தாதா இடை இடையில் டிராபிக் கண்ட்ரோல் நேரத்தை நிர்ணயித்து இருக்கின்றார்கள். டிராபிக் கண்ட்ரோல் செய்கின்றீர்களா அல்லது பகலில் பிஸியாக இருக்கின்றீர்களா? தன்னுடைய

நியமத்தை உருவாக்கி இருக்க வேண்டும். நேரம் கொஞ்சம் முன் பின் ஆகலாம், ஆனால், ஒருவேளை, கவனம் இருக்குமானால் வருமானம் சேமிப்பு ஆகும். அந்த சமயம் ஒருவேளை ஏதாவது வேலை உள்ளது என்றால் அரை மணி நேரத்திற்குப் பிறகு செய்யுங்கள், ஆனால், செய்ய முடியும் அல்லவா. நேரத்தின் ஆதாரத் திலேயே ஏன் நடக்கிறீர்கள்? தன்னுடைய புத்தி கூட கடிகாரம் ஆகும், தெய்வீக புத்தியின் கடிகாரத்தை நினைவு செய்யுங்கள். எந்த விசயத்தின் பழக்கம் ஏற்பட்டுவிடுகிறதோ, அந்தப் பழக்கம் என்பது அப்படிப்பட்டது, அது விரும்பாமலேயே தன் பக்கம் கவர்ந்திழுக்கும். எப்பொழுது தீய பழக்கம் கூட இருக்கவிடுவதில்லை, தன் பக்கம் கவர்ச்சி செய்கிறது எனில், நல்ல சமஸ்காரம் ஏன் தன்னுடையதாக ஆக்கமுடியாது! ஆகையினால், சதா சோதனை செய்யுங்கள் மற்றும் மாற்றம் செய்யுங்கள். அப்பொழுது சதா காலத்திற்கும் வருமானம் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். நல்லது.

2. சதா தன்னை ஞான மழை பொழிபவராக (ரூப் பசந்த்) அனுபவம் செய்கின்றீர்களா? ரூப் என்றால் ஞான சொரூப ஆத்மா மற்றும் யோக சொரூப ஆத்மா என்பதாகும். எந்த நேரம் வேண்டுமோ ரூப் (யோகி) ஆகி விடவேண்டும் மற்றும் எந்த நேரம் வேண்டுமோ பசந்த் (ஞானி) ஆகி விடவேண்டும், ஆகையினால், யோகி ஆகுங்கள், தூய்மை ஆகுங்கள் அதாவது ஞானி ஆகுங்கள் என்பது உங்கள் அனைவருடைய சுலோகன் ஆகும். பிறருக்கு இந்த சுலோகனை நினைவுபடுத்துகின்றீர்கள் அல்லவா. எனவே, ஒரு நொடியில் இரண்டு ஸ்திதிகளும் உருவாக முடியும். ஆகவிரும்புவதோ ரூப்பாக (யோகியாக) மற்றும் நினைவு வருவதோ ஞானத்தின் விசயங்கள் என்பது இருக்கக் கூடாது. நொடியை விட குறைவான சமயத்தில் முற்றுப்புள்ளி இடப்பட்டுவிட வேண்டும். இந்த நொடி முற்றுப்புள்ளி வைத்தீர்கள் ஆனால், ஐந்து நிமிடங்களுக்குப் பிறகே முற்றுப்புள்ளி இடப் பட்டது, இவ்வாறு இருக்கக்கூடாது. இதை சக்திசாலியான பிரேக் என்று சொல்லமுடியாது. சக்திசாலியான பிரேக்கின் வேலையே எங்கு போடுகின்றீர்களோ, அங்கே வண்டி நின்றுவிட வேண்டும். ஒரு விநாடி தாமத மானாலும் விபத்து நடந்துவிடும். முற்றுப்புள்ளி வைப்பது என்றால் பிரேக் சக்திசாலியாக இருப்பது என்று அர்த்தம். எங்கே மனம், புத்தியை ஈடுபத்த விரும்பு கின்றீர்களோ, அங்கே ஈடுபடுத்த முடிய வேண்டும். இந்த மனம், புத்தி, சமஸ்காரம் ஆத்மாக் களாகிய உங்களுடைய சக்திகள் ஆகும். ஆகையினால், சதா இந்தப் பயிற்சி செய்து கொண்டே இருங்கள் - எந்த நேரம், எந்த விதிப்படி மனம், புத்தியை ஈடுபடுத்த விரும்புகின்றீர்களோ, அப்படி ஈடுபடுகிறதா அல்லது சமயம் ஆகிறதா? சோதனை செய்கின்றீர்களா அல்லது முழு நாள் கடந்துவிடுகிறது, பிறகு, இரவு சோதனை செய்கிறீர்கள் - அப்படியா? இடை இடையில் சோதனை செய்யுங்கள். ஒருவேளை, இப்பொழுது புத்தியை இந்தப் பக்கத்திலிருந்து விலக்கி பாபாவின் பக்கம் ஈடுபடுத்த வேண்டும் என்று எந்த நேரம் புத்தி மிகவும் பிஸியாக உள்ளதோ, அந்த நேரம் முயற்சிக்கும்பொழுது, ஒரு விநாடியில் புத்தி ஈடுபடுகிறதா என்று முயற்சி செய்து பாருங்கள். இதில் ஒரு விநாடி கூட அதிகம் தான். இதையே கண்ட்ரோலிங் பவர் (கட்டுப்படுத்தும் சக்தி) என்று கூறப்படுகிறது. யாரிடம் கண்ட்ரோலிங் பவர் இல்லையோ, அவர்கள் ரூலிங் பவரின் (ஆட்சிபுரியும் சக்தி) அதிகாரி ஆகமுடியாது. சுயராஜ்யத்தின் கணக்குப்படி இப்பொழுதும் கூட நீங்கள் ஆட்சி புரிபவர்களே ஆவீர்கள். சுயராஜ்யம் கிடைத்துள்ளது அல்லவா. கண்களுக்கு இதை பார் என்று

சொல்கிறீர் கள், அது வேறொன்றைப் பார்க்கிறது, காதுக்கு இதைக் கேட்காதே என்று சொல்கிறீர்கள், அது கேட்டுக்கொண்டே இருக்கிறது என்பது கூடாது. இதை கண்ட்ரோலிங் பவர் என்று கூறமுடியாது. ஒருபொழுதும் எந்தக் கர்மேந்திரி யமும் ஏமாற்றக் கூடாது. இதையே சுயராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. எனவே, இராஜ்யம் செய்யத் தெரிகிறது அல்லவா? ஒரு வேளை, இராஜா சொல்வதை பிரஜைகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவரை பெயரளவிற்கு இராஜா என்று சொல்வார்களா அல்லது அதிகாரமுள்ள இராஜா என்று சொல்வார்களா? ஆத்மாவின் அனாதி சொரூபமே இராஜா, எஜமானன் என்ற சொரூபம் ஆகும். அது பின்னால் மற்றவைக்குக் கீழ்படிந்ததாக ஆகிவிட்டது, ஆனால், ஆதி மற்றும் அனாதி சொரூபம் சுதந்திரமானது ஆகும். எனவே, ஆதி மற்றும் அனாதி சொரூபம் சுதந்திரம் ஆகும். ஆதி மற்றும் அனாதி சொரூபம் சகஜமாக நினைவு வரவேண்டும் அல்லவா. சுதந்திரமாக இருக் கின்றீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் மற்றவைக்குக் கீழ்படிந்து இருக்கின்றீர்களா? மனதினுடைய பந்தனம் கூட இருக்கக் கூடாது. ஒருவேளை, மனதின் பந்தனம் இருக்குமானால், அந்த பந்தனம் மற்ற பந்தனங்களைக் கொண்டு வரும். எத்தனை பிறவிகள் பந்தனத்தில் இருந்து பார்த்துவிட்டீர்கள்! இப்பொழுதும் பந்தனம் நன்றாக உள்ளதா என்ன? பந்தன்முக்த் என்றால் இராஜா, சுயராஜ்ய அதிகாரி என்று அர்த்தம். ஏனெனில், பந்தனம் பிராப்திகளை அனுபவம் செய்யவிடுவதில்லை. ஆகையினால், சதா பிரேக்கை சக்திசாலியாக வைத்துக்கொள்ளுங்கள், அப்பொழுதே இறுதியில் மதிப்புடன் தேர்ச்சி பெறுவீர்கள் அதாவது முதல் டிவிசனில் வருவீர்கள். ஃபர்ஸ்ட் (முதலாவது) என்றால் ஃபாஸ்ட் (வேகம்), மந்தமான நிலை அல்ல. பிரேக் வேகமாக போடப்பட வேண்டும். எப்பொழுதாவது மலைப் பாதையில் செல்கின்றார்கள் என்றால் முதலில் பிரேக்கை சோதனை செய்வார்கள். நீங்கள் எவ்வளவு உயரச் செல்கின்றீர்கள்! எனவே, பிரேக் சக்திசாலியாக இருக்க வேண்டும் அல்லவா. அடிக்கடி சோதனை செய்யுங்கள். பிரேக் நன்றாக உள்ளது என்று நீங்கள் நினைத்துக்கொண்டு இருக்கின்றீர்கள், ஆனால், சரியான நேரத்தில் பிரேக் விழவில்லை என்றால் ஏமாற்றம் ஏற்பட்டுவிடும் - இப்படி ஆகிவிடக் கூடாது. ஆகையினால், ஸ்டாப் என்றால் ஸ்டாப்பாகி விடவேண்டும் - இதற்கான பயிற்சி செய்யுங்கள். ரித்தி ஸித்தி செய்பவர்கள் என்ன செய்கின்றார்கள்? சென்று கொண்டிருக்கும் இரயில் வண்டியை நிறுத்தி விட்டார்கள் என்ற ஸித்தியை செய்து காண்பிக்கின்றார்கள். ஆனால், அதனால் என்ன இலாபம்? நீங்கள் சங்கல்பங்களின் டிராபிக்கை (நெரிசலை) நிறுத்துகின்றீர்கள். இதனால் மிகுந்த இலாபம் உள்ளது. உங்களுடையதோ விதி மூலம் ஸித்தி என்பதாகும் மற்றும் அவர்களுடையதோ ரித்தி ஸித்தி ஆகும். அது அல்ப காலத்திற்கானது, இது சதா காலத்திற்கானது. எனவே, அனைவரும் ஞானம் நிறைந்தவர்கள் ஆகிவிட்டீர்கள். படைப்பாளர் மற்றும் படைப்பினுடைய முழு ஞானம் வந்துவிட்டது. தாய்மார்கள் என்ன செய்வார்கள் என்று உலகத்தினர் நினைக்கின்றனர். தாய்மார்கள் முடியாததைக் கூட முடியக்கூடியதாக ஆக்கி விடுவார்கள். அப்பேற்பட்ட சக்திகள் தானே? நல்லது.

வரதானம் : பிறரைப் பற்றி கருத்து சொல்வதற்குப் பதிலாக தன்னை மாற்றக்கூடிய சுயசிந்தனையாளர் ஆகுக.

சில குழந்தைகள் போகப்போக இந்த மிகப் பெரிய தவறு செய்கின்றார்கள் - பிறருக்கு நீதிபதி ஆகிவிடு கின்றார்கள் மற்றும் தனக்கு வக்கீல் ஆகிவிடுகின்றார்கள். இவர்கள் இதை செய்யக்

கூடாது, இவர்கள் மாற வேண்டும் என்று சொல்வார்கள் மற்றும் தன்னைப் பற்றி சொல்லும் பொழுது இந்த விசயம் முற்றிலும் சரியானது, நான் என்ன சொல்கின்றேனோ அதுவே சரி . . . என்று சொல்வார்கள். இப்பொழுது பிறரைப் பற்றி அத்தகைய கருத்தை சொல்வதற்கு பதிலாக தனக்கு நீதிபதி ஆகுங்கள். சுயசிந்தனையாளர் ஆகி தன்னைப் பாருங்கள் மற்றும் தன்னை மாற்றுங்கள், அப்பொழுதே உலக மாற்றம் ஏற்படும்.

சுலோகன்: சதா மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால்,

ஒவ்வொரு காட்சியையும் சாட்சியாகிப் பாருங்கள்.